**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலகு – திரு.மு.சதீஷ்குமார், த/பெ. காலஞ்சென்ற திரு.எஸ்.முருகன் – கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,**
**பணிகள் அலகு, பணி–9(2) பிரிவு**

**அரசாணை (3டி) எண். 165**

**நாள் 09.10.2023.**
**சோபகிருது வருடம், புரட்டாசி–22,**
**திருவள்ளுவர் ஆண்டு 2054.**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண். ஆகு3/3180963/2022, நாள் 19.04.2023.

******

**ஆணை:–**

திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலகில், கிராம உதவியாளராகப் பணியாற்றி பணியிடையே 15.10.2020 அன்று காலமான திரு.எஸ்.முருகன் என்பவரின் மகன் திரு.மு.சதீஷ்குமார் என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி குறிப்பிட்ட காலவரம்பிற்குள் விண்ணப்பம் அளித்திருந்தார். கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் பெற அனைத்துத் தகுதிகளையும் தனியர் பெற்றிருந்ததால், திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை வருவாய் ஆய்வாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டு, தனியர் 06.05.2022 பிற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளதாகவும், திரு.மு.சதீஷ்குமார் என்பவரை திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலகில், கருணை அடிப்படையில் 06.05.2022 பிற்பகல் முதல் இளநிலை வருவாய் ஆய்வாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வேண்டி திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர், கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையருக்கு முன்மொழிவு அனுப்பியிருந்தார்.

2. திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவினை கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் ஏற்று, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

//த.பி.பா//

3. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரையை உரிய ஆவணங்களுடன் அரசு கவனமுடன் பரிசீலனை செய்த பின்னர், திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலகில், கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக தற்காலிகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.மு.சதீஷ்குமார் என்பவருக்கு இளநிலை வருவாய் ஆய்வாளர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 06.05.2022 பிற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஆண்டு ஊதிய உயர்வு, ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெறத் தனியர் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.5468/க்யூ2/2023-1, நாள் 27.07.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையிடம் 07.09.2023 நாளில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**வே. ராஜாராமன்,**
**அரசு செயலாளர்.**

**பெறுநர்**

கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை-5.
மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் மாவட்டம்.
திரு.மு.சதீஷ்குமார், இளநிலை வருவாய் ஆய்வாளர்
(திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரின் மூலமாக)

**நகல்**

மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

A3 06/11/23

(4)

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

9/10/2023

**பிரிவு அலுவலர்.**

09/10/23